# ஹஸ்தம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ ஹஸ்தம் சக்தி**

பஞ்சகிர்த்தியசுத்தகர்த்தத்துவம்,

தற்பரம், சிதம்பரவிலாசம்.

**3. திருப்பாவைபாசுரம் – 4 ஹஸ்தம் இயல்பு**

ஆழி மழைக்கண்ணா ஒன்று நீ கைகரவேல்

ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி

ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கருத்துப்

பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்

ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து

தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்

வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்

மார்கழி நீராடமகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/KOcjhUJpxIU**

**விளக்கம் :**

ஆழிமழைக் கண்ணா, உன் கையில் ஒன்றையும் ஒளித்து வைக்காமல் ஒரு துளி நீரையும் ஒளித்து வைக்காமல் அனைத்து நீரையும் மழையாக பொழியும் அஸ்தம் கைகளே உன் கைகள். எனவே, ஹஸ்தம் என்ற இந்த கையான ஆழிபோல் மின்னி வலம்புரி சங்குபோல் அதிர்ந்து சரம், சரம் ஆக மண்ணுக்கு வழங்குகிறாய். அதுபோல் இந்த

ஹஸ்த நக்ஷத்திரம் பஞ்ச பூதங்களுடைய நீர்சக்தி, ஆகாயசக்தி, நெருப்புசக்தி, காற்றுசக்தி அனைத்தையும் உள்ளடக்கியதே இந்த ஹஸ்த சக்தியாகும். எனவே உலகில் நல்ல சத்சங்கம் இருந்தால் நல்ல மழை பொழியும், இல்லை எனில் இந்த ஹஸ்த சக்தி மன்னிக்காது தண்டித்து விடும். சித்தி புத்தி விநாயகர் அருள் இங்கு இணைந்து நோக்குதல் அவசியம்.

இந்த இறை சக்தியின் விலாசத்தை மகிழ்ச்சியை மார்கழி தரிசனத்தில் காணலாம். இயற்கை இனிமையானது. இயற்கைக்கு ஐந்து முகங்கள் அதுதான் ஹஸ்தத்திற்கு ஐந்து விரல்கள் சங்கு, சக்கர, கதா, புஷ்ப, கோதண்டம்.

நான்கு கைகளில் நன்கமைந்து தும்பிக்கையுடன் ஹஸ்தத்தின் பெருமையை பறைசாற்றும், ஜீவ ஜோதியே இந்த பாடலின் ஹஸ்தமாய் வருகிறது.

உள்ளங்கையிலே ஒரு துளி நீரையும் ஒளித்து வைக்காமல் வையகம் வாழ நன்கொடையாக மழைபோல் தரும் அஸ்த நக்ஷத்ரமே சுத்த கர்த்தத்துவத்தை அரங்கேற்றம் செய்கிறது. இந்த வகையான ஆழிமழைக் கண்ணன் ஒரு கையில் சங்கு போல் முழங்கி, மறு கையில் சக்கரம் போல் மின்னி சரம், சரமாக மழையை உலகத்திற்கு அளிக்கிறது. இங்கே ஹஸ்த நக்ஷத்ரம், பாவங்களை மன்னிக்காது, சக்கரத்தை கொண்டு விலாசத்தை அதாவது இறைவனின் முகவரியை முழங்கி அறிவிக்கிறது.

எனவே கரதரிசனமே தற்பரமாகும். ஹஸ்தமே கரதரிசனமாகும். ஹஸ்தத்திலுள்ள ஐந்து விரல்களும் பஞ்ச பூதங்களின் பணியை கறை

படியாமல் வெண்சங்கு உலகத்திற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

கருத்தமேனியும் பருத்த தோள்களும், சரம் சரமாக அம்புகளை மழை அம்புகளை அனுப்பி பத்மநாபனை நமக்கு நினைவூட்டும், மார்கழி நீராடுதல் மகிழ்ச்சியை அளிக்க வல்லதான யதார்த்த மழையை வாழ்வதற்கான மழையை அளிப்பவர்களே ஹஸ்த நக்ஷத்திரர்கள். ஹஸ்தமே வருக! ஹஸ்தமே அருள்க!

## 4. வேதத்தில் ஹஸ்தம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

ப்ரயச்சதாயை வித்மஹே
ப்ரக்ருப்ணிதாயை தீமஹி
புண்ய தாதா தீமஹி
தன்னோ ஹஸ்த ப்ரசோதயாத்

உள்ளத்து ஒழுக்கம் உருவாகும்
உன்னத நிலையை தந்துவிடும்
பஞ்ச பூதங்கள் அரசாளும்
பரிசுத்தமான பணி செய்யும்

சுவாராஸ்யமான வாழ்வளிக்கும்
சுத்தம் நிறை தரும் நிலை கொடுக்கும்
அனைத்தும் அறிந்திடும் அறிவு தரும்
ஆண்டவன் தரிசனம் நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே

த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

**<u>5. ஹஸ்தம் கவிதை</u>**

ஐம்புலன் அகத்தே அனைத்தும் உள்ளங்கை
ஐம்புலன் சத்திய, தர்ம அகிம்சை சாந்தி, ப்ரேமை
ஐந்தலை பணியும் ஒளிரும் மிளிர்நங்கை
அய்வரம் தரும் விரலிடை தளிர் உன்கை

அகசுத்த கர்த்தத்துவம்; சுய கர்த்தத்வமே
இகபர கர்த்தத்வம்; ஈடில்லா தத்துவமே
மெய்ஞான கர்த்தத்வம்; குறையிலா இலக்கணமே
சொல்ஞான கர்த்தத்வம்; இல்லாத மன்னிப்பே

தானே பரமாகி, பரமே இகமாகிய அனிச்சையே
வானே வந்திறங்கி, வாசல் காட்டிய எனிச்சையே
மானே, மயிலாகி; வாகனமாய் ஒட்டிய தனிச்சையே
கானே கடலாகி நடன உடலாகிய விலா

தவறுதல் என்னியல்பு ; மன்னிக்கமாட்டாயா?
உளறுதல் என்னியல்பு ; உறவாட மாட்டாயா?
அலறுதல் என்னியல்பு ; அணைக்க மாட்டாயா?
ஊடுதல் என்னியல்பு ; சமனாக்க மாட்டாயா?

தண்டித்தலே தீர்வென்றால் அருள் எதற்கு
கண்டித்தலே தந்தையென்றால் அன்பு எதற்கு
மண்டித்தலே ஆசானென்றால் விலாசம் எதற்கு
உண்டித்தலே கையென்றால் உயர்வு எதற்கு

முகவரி காட்டிய அழிவிலா மார்க்கமன்றோ?
அகவரி போற்றி கழுமுனை சுவாசமன்றோ?
சகவரி ஏற்றிய சமரசமிலா பாசமன்றோ?

தகவரி இயற்றிய நிகரிலா ஆடலன்றோ?

## 6. அபிராமி அந்தாதியில் ஹஸ்தம் சக்தி

### உலகோர் பழியிலிருந்து விடுபட

தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது, துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே; பின் வெறுக்கை அன்றே.

### நல்நடத்தையோடு வாழ

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே; புது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்துபொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும், யான் உன்னை வாழ்த்துவேனே!

### யோகநிலை அடைய

வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன்; மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று, விள்ளும் படி அன்று, வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

### உடல் பற்று நீங்க

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதிந்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ;
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் ஹஸ்தம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

ஓம் ஸு்வ்ரதாய நம – விரதமிருந்து வாழ்த்துபவனே போற்றி

ஓம் ஸு்முகாய நம – இன்பவடிவ முகத்தோனே போற்றி

ஓம் ஸு்சூ்ஷ்மாய நம – சூக்ஷமம் அறிந்த அமைதியே போற்றி

ஓம் ஸு்கோஷாய நம – ஓம் எனும் பிரணவ நாதமே போற்றி

ஓம் ஸு்கதாய நம – நல்லவர்களுக்கு சுகமளிப்பவளே போற்றி

ஓம் ஸு்ஹ்ருதே நம – பிரதிபலன் பாரா ஆதரவே போற்றி

ஓம் மநோஹராய நம – மனோகர இனக்கவர்ச்சியே போற்றி

ஓம் ஜிதக்ரோதாய நம – கோபத்தை வென்றவனே போற்றி

ஓம் வீரபாஹவே நம – வேத தர்மம் காக்கும் வீரபாகுவே போற்றி

ஓம் விதாரணாய நம – அதர்மவான்களை அழிப்பவனே போற்றி

ஓம் ஸ்வாபநாய நம – யோகநித்திரை அருள்பவனே போற்றி

ஓம் ஸ்வவஸாய நம – தனித்தன்மை கொண்ட பிரபஞ்சமே போற்றி

ஓம் வ்யாபிநே நம – விண்ணுரையில் விமர்சிக்கும் நேசமே போற்றி

ஓம் நைகாத்மநே நம – இயற்கை கீர்த்தி ஐந்தில் நியாயம் தருபவனே போற்றி

ஓம் நைககர்மக்ருதே நம – பஞ்சபூதத்தின் சுத்த செயல்களே போற்றி

ஓம் வத்ஸராய நம – அன்னையருள் மறைமுகமே போற்றி

ஓம் வதஸ்லாய நம – அனுதின பாவமன்னிப்பு போற்றி

ஓம் வத்ஸிநே நம – உடனடி தோப்பு கரணமே போற்றி

ஓம் ரத்நகர்ப்பாய நம – திருப்பாற்கடல் அருளும் நவரத்தினமே போற்றி

ஓம் தநேஸ்வராய நம – உழைப்பின் உயர்வான செல்வமே போற்றி

ஓம் தர்மகுபே நம – தர்மத்தின் தலைவனே போற்றி

ஓம் தர்மக்ருதே நம – சமூக கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுக்கு மதிப்பளிப்பவனே போற்றி

ஓம் தர்மிநே நம – சமூகநீதி மறுக்கப்படின் தண்டனை தருபவனே போற்றி

ஓம் ஸதே நம – சத்தியத்தின் அன்புப் பரிசு போற்றி

ஓம் அஸதே நம – அசத்தியமல்லாதவற்றின் சமாதானமே போற்றி

ஓம் க்ஷராய நம – மாற்றத்தின் அங்கீகாரமே போற்றி

ஓம் அக்ஷராய நம – மாற்றமின்மையின் மாண்பே போற்றி

ஓம் அவிஜ்ஞாத்ரே நம – கிளைகள் இல்லாத நிறுவனமே போற்றி

ஓம் ஸஹஸ்ராம்ஸவே நம – ஆயிரம் கைகளுடையவனே போற்றி

ஓம் விதாத்ரே நம – தாதாக்களின் தலைமையே போற்றி

ஓம் க்ருதலஷணாய நம – விழிப்புணர்வு வித்தகனே போற்றி

ஓம் கபஸ்திநேமயே நம – ஐந்து விரல்களின் சுவாரஸ்யமே போற்றி

ஓம் ஸத்த்வஸ்த்தாய நம – ஆன்மீக சுயம்புவே போற்றி

ஓம் ஸிம்ஹாய நம – சிம்மாசன சிகரமே போற்றி

ஓம் பூதமஹேஸ்வராய நம – தெய்வங்கள் வணங்கும் தேவனே போற்றி

ஓம் ஆதிதேவாய நம – பிரதம ஹரிதேவனே போற்றி

ஓம் மஹாதேவாய நம – சிறப்பான ஐம்புலனே போற்றி

ஓம் தேவேஸாய நம – சர்வ முக்கியமே போற்றி

ஓம் தேவப்ருத்குரவே நம – இந்திரனின் இதய துடிப்பே போற்றி

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ஹஸ்தம் சக்தி

காம்யாகாமகலாரூபாகதம்ப குஸும ப்ரியா
கல்யாணீ ஜகதீ கந்தாகருணாரஸ ஸாகரா

கலாவதீ கலாலாபாகாந்தாகாதம்ப்ரீப்ரியா
வரதாவாமநயனா வாருணீ மத விஹ்வலா

விச்வாதிகாவேதவேத்யா விந்த்யாசல நிவாஸிநீ
விதாத்ரீவேதஜநநீ விஷ்ணுமாயா விலாஸிநீ

க்ஷேத்ரஸ்வரூபாக்ஷேத்ரேசீ க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞபாலினீ
க்ஷயவ்ருத்தி விநிர்முக்தாக்ஷேத்ரபால ஸமர்ச்சிதா

விஜயா விமலாவந்த்யாவந்தாரு ஜன வத்ஸலா
வாக்வாதினீ வாமகேசீ வஹ்னிமண்டல வாஸிநீ

பக்திமத்கல்பலதிகாபசுபாச விமோசிநீ
ஸம்ஹ்ருதாசேக்ஷபாஷாண்டா ஸதாசாரப்ரவர்த்திகா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் ஹஸ்தம் சக்தி

நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால்

விட்டிட மாட்டேன் ஸ்கந்தா வீட தருள்வீரே

நடுநெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்

ப்ரம்ம மந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்

சுழுமுனை மார்க்கமாய் ஜோதியைக் காட்டிடுவாய்

சிவ யோகியாக எனைச் செய்திடும் குருநாதா

ஆசை அறுத்து அரனடியைக் காட்டிவிடும்

மெய்யடி யராக்கி மெய்வீட்டில் இருத்திவிடும்

கொங்கு நாட்டிலே கோயில் கொண்ட ஸ்கந்தகுரோ

கொல்லி மலைமேலே குமரகுரு வானவனே

கஞ்சமலை சித்தர் போற்றும் ஸ்கந்தகிரி குருநாதா

கருவூரார் போற்றும் காங்கேயா ஸ்கந்தகுரோ

மருதமலை சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ

சென்னிமலைக் குமரா சித்தர்க் கருள்வோனே

சிவவாக்கிய சித்தருளைச் சிவன்மலையில் போற்றுவரே

பழனியில் போகருமே பாரோர்வாழப் ப்ரதிஷ்ட்டித்தான்

புலிப்பாணி ஸித்தர்களால் புடைசூழ்ந்த குமரகுரோ

கொங்கில் மலிந்திட்ட ஸ்கந்த குருநாதா

கள்ளம் கபடமற்ற வெள்ளை யுள்ளம் அருள்வீரே

கற்றவர்களோ டென்னைக் களிப்புறச் செய்திடுமே

உலகெங்கும் நிறைந்திருந்தும் ஸ்கந்தகுரு உள்ள இடம்

ஸ்கந்தகிரி என்பதை நான் கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்.

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

**10. கந்தர் அநுபூதி ஹஸ்தம் சக்தி**

அடியைக் குறியாது அறியா மையினால்

முடியக் கெடவோ? முறையோ? முறையோ?

வடி விக்ரம வேல் மகிபா, குறமின்

கொடியைப் புணரும் குண பூதரனே.(23)

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே

சேர்வேன், அருள் சேரவும் எண்ணுமதோ

சூர் வேரொடு குன்று தொளைத்த நெடும்

போர் வேல, புரந்தர பூபதியே.(24)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

**11. ராகங்களில் உத்திரம் சக்தி**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| காங்கேய பூஷணி | வாகதீஸ்வரி | வாகதீஸ்வரி | சூலினி |

**12. மூலமந்திரம்**

ஓம் கணபதயே நமஹ

**13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| அத்தி | தென்னம்பிள்ளை | ஒதிய | புத்ரசீவி |

**14. பரிகாரம்**

- பசுமையான கீரை, பச்சைப்பயிறு பசுவிற்கு தானம் செய்யவும்
- உங்கள் முகத்தைப் பாலால் கழுவவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.

- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு கிருபா கூபாரேச்வரர் திருக்கோயில்,** குத்தாலம் - கும்பகோணம்.


Aathma Trust **(ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra